செ.கு. எண் :- 149 நாள் :- 25-10-2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 25.10.2011

சென்னை, வண்டலூர், ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் அயல்பணியில் பணி புரிந்து வந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. முகமது கவுஸ் கான் கோரி என்பவர் 24.10.2011 அன்று ஓட்டப் பயிற்சியின் போது நெஞ்சுவலி ஏற்பட்டு காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. முகமது கவுஸ் கான் கோரி பணியில் ஈடுபட்டிருந்த போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. முகமது கவுஸ் கான் கோரி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. முகமது கவுஸ் கான் கோரி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்